முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

**அ.வ.எண்.363/2022**

2025-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக வா.சா.2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95-வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சரவணன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் இவ்வழக்கில் 3 ஆம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். சாட்சி சரவணன் பெயரில் உள்ள ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி வழக்குரையில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

## 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா.1 ரமேஷ் உங்களுக்கு நண்பரா, உறவினரா என்றால் என் நண்பர். உங்கள் ஊருக்கும், வடக்குப்பாளையம் ஊருக்கும் எவ்வளவு

தூரம் இருக்கும் என்றால் 10-12 கி.மீ. இருக்கும். வாதியை எத்தனை வருடங்களாக உங்களுக்கு தெரியும் என்றால் 12-13 வருடங்களாக தெரியும். வாதி விவசாயத்தை தவிர வேறு ஏதாவது தொழில் செய்துள்ளாரா என்றால் விவசாயம் செய்து வருகிறார், ஆடு, மாடுகளும் வைத்துள்ளார். இறந்துபோன ரெங்கசாமி கடன் வாங்கியதாக சொல்லும் நபரை உங்களுக்கு முன், பின் தெரியுமா என்றால் முன், பின் தெரியாது, வாதி மூலம் 10 வருடங்களாக தெரியும். இறந்துபோன ரெங்கசாமி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பாக்குமட்டை தொழில் செய்து வந்தார். இறந்துபோன ரெங்கசாமி குடும்பத்துடன் எந்த ஊரில் வசித்து வந்தார் என்றால் உழவர் சந்தைக்கு எதிரில் காவேரியம்மாள் தோப்பு, கரூரில் வசித்து வந்தார். இறந்துபோன ரெங்கசாமியின் தம்பி சிவக்குமார் என்பவரின் துாண்டுதலின்பேரில் நீங்கள், வாதி ரமேஷ், திருமூர்த்தி, ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து பொய்யான தாவாவை தாக்கல் செய்து 1, 2 பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்கவேண்டி பொய்யாக கட்சி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரெங்கசாமி எந்த காலத்திலும் கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**